# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 55/பேரூ/2023**
**நாள் : 03.04.2023**

திரு. P. ஜான் வெஸ்லி,
நாசரேத், தூத்துக்குடி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம் – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், நாசரேத், திருமறையூர், எண்.14B என்ற முகவரியைச் சேர்ந்த திரு. பி. ஜான் வெஸ்லி என்பவரது 04.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2023 அன்று பெறப்பட்டு 55/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், நாசரேத், திருமறையூர், எண்.14B என்ற முகவரியைச் சேர்ந்த திரு. P. ஜான் வெஸ்லி என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

என் பெயர் ஜான் வெஸ்லி, நான் இந்திய கடற்படை விசாகபட்டிணத்தில் வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்தமான, வேர்கிளம்பி பேரூராட்சிக்குட்பட்ட கதவு எண்.16/56A, மார்த்தாண்டன்விளை, புவன்கோடு, வேர்கிளம்பியில் (கல்லாங்குழி AG சபை அருகில்) எனக்கு சொந்தமான பட்டா நிலம் சர்வே எண்.281/16 மற்றும் 281/17B, ஆகிய இரண்டு சர்வே எண்களில் எனக்கு சொந்தமான 3 செண்ட் நிலம் உள்ளது. எனது நிலத்தின் அருகே உள்ள கதவு எண்.16-48/4, மார்த்தாண்டத்தில் பூவனகோட்டில் வசித்துவரும் திரு. சதிஷ் என்பவரின் சர்வே எண்.281/17-ல் 1 செண்ட் இடம் உள்ளது. இவர் அவருக்கு சொந்தமான 1 செண்டில் வீடு கட்டாமல் போலி வீட்டு அப்ரூவல் வாங்கி என்னுடைய 1 செண்ட் இடத்தில் விதியை மீறி, அதிகாரிகள் துணையுடன் வீட்டையும், காம்பவுண்டு சுவற்றையும் 2 செண்ட்டில் கட்டியுள்ளார். அப்ரூவல் கொடுத்த அதிகாரி நேரில் சென்று அளவுகளை அளக்காத காரணத்தினால் எனது 1 செண்ட் இடம் காணாமல் போய் உள்ளது . அதிகாரிகள் சரியாக பணி செய்யாத காரணத்தினால் நான் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளேன். இது சம்பந்தமாக மறு அளவீடு செய்து போலி வீட்டு அப்ரூவல்-ஐ cancel செய்யுமாறு 01.02.2023ல் CM Help Line-ல் புகார் அளித்து இருந்தேன் புகார் எண்.4964620 மற்றும்

23.02.2023-ல் இரண்டாவதாக புகார் அளித்தேன் புகார் எண்.5027554. இது சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் புகார் நிராகரிப்பு செய்யப்பட்டுள்ளது. வேர்கிளம்பி பேரூராட்சி அதிகாரிகள் ஒருதலைபட்சமாக செயல்படுகின்றனர். எனவே தங்கள் பார்வைக்கு என் புகாரினை கொண்டு வந்துள்ளேன். தாங்கள் தயவு செய்து மேற்கண்ட வீட்டின் அளவுகளை மறு ஆய்வு செய்து தவறு இருக்கும் பட்சத்தில் வீட்டு அப்ரூவல்-ஐ cancel செய்து அப்ரூவல் கொடுத்த அதிகாரிகள் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 09.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 23.03.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"நான் 11.01.2023 முதல் கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி முதல் நிலை பேரூராட்சியில் செயல் அலுவலர் கூடுதல் பொறுப்பாக பணிபுரிந்து வருகிறேன். திரு. சதீஷ், த/பெ. செல்லப்பன், மார்த்தாண்டன்விளை, பூவன்கோடு, வேர்கிளம்பி என்பவர் 21.09.2017-ல் ஆவண எண்.92 வருடம் 2007 பட்டா எண்.3394 மற்றும் பட்டா எண்.3687 மற்றும் கிராம அலுவலக ரசீது எண்.0117280 நாள்:23.01.2017 உடன் கட்டட வரைபட அனுமதி வேண்டி மனு சமர்ப்பித்துள்ளார். அப்போதைய செயல் அலுவலர் திருமதி. C. மாலதி என்பவரால் இடம் ஆய்வு செய்யப்பட்டு உரிய விதிமுறைகளுக்குட்பட்டு விண்ணப்ப வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 1 சென்ட் இடத்தில் தரைத்தளம் Plinth Area 403.39 சதுர அடியிலும், முதல் தளம் 268.50 சதுர அடி அளவிலும் கட்டடம் கட்ட பேரூராட்சி செயல் அலுவலரால் 29.12.2017 அன்று சில நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபட அனுமதியின்படி வீடு கட்டி முடிக்கப்பட்டிருப்பதாக 27.07.2020-ல் திரு.சதீஷ் என்பவர் கட்டடத்திற்கு வரி விதிப்பு செய்து தரும்படி விண்ணப்பம் செய்துள்ளார். அதன்படி அப்போதைய செயல் அலுவலர் திருமதி. G. உஷா கிரேஸி என்பவரால் இடம் ஆய்வு செய்யப்பட்டு வரிவிதிப்பும் செய்யப்பட்டு அன்றைய தேதி முதல் (16.09.2020 முதல்) வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட வரைபட அனுமதி வழங்கப்பட்ட தேதியிலிருந்து இதுநாள் வரையிலும் (20.02.2023) எந்த விதமான புகார் மனு ஏதும் பேரூராட்சி அலுவலகத்தில் பெறப்படவில்லை. தற்போது திரு. ஜான்வெஸ்லி என்பவர் மாண்புமிகு முதல்வரின் முகவரியிலும் திரு. பிரபாகர் ஜெயசிங் என்பவர் தகவல் அறியும் சட்டம் ஆகியவற்றின் மூலம் தொடர்ந்து புகார் மனு தெரிவித்து வருகிறார். மேற்காணும் புகார் மனுவின் அடிப்படையில் திரு. சதீஷ் என்பவருக்கு சொத்தின் உண்மை தன்மை குறித்தும், நிலத்தை அளந்து திடப்படுத்தவும் இதுகுறித்து பேரூராட்சியில் விளக்கம் அளிக்கவும் கேட்டு, அறிவிப்பு கடிதம் சார்வு செய்யப்பட்டுள்ளது. திரு. சதீஷ் 08.03.2023வரை பதில் எதுவும் சமர்ப்பிக்காத நிலையில், பேரூராட்சியிலிருந்து வழங்கப்பட்ட வரைபட அனுமதி எண்.105/2017-18 க்கான கட்டடம் அமைந்துள்ள சொத்து, மேக்கோடு கிராமம் தற்போது குமரன்குடி கிராமம் சர்வே எண்.281/16 மற்றும் 281/17-ல் உட்பட்ட சென்ட் சொத்தில் ஆவணம் எண்.21/2014-ன் படி 0.500 சதுர லிங்ஸ் சொத்து மற்றும் 92/2017 ஆவணத்தின்படி 0.500 சதுர லிங்ஸ் நிலத்தில் அமைந்துள்ளதா எனவும் அல்லது புகார் மனுவில் தெரிவித்துள்ளபடி கூடுதல் சொத்தில் கட்டடம் கட்டப்பட்டுள்ளதா எனவும் சொத்து ஆவணங்கள் அடிப்படையில்

சொத்தினை அளந்து எல்லை நிர்ணயம் செய்து திடப்படுத்தி அறிக்கை வழங்க வேண்டி திருவட்டார் வட்டாட்சியருக்கு 9.3.2023 நாளிடப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, வட்டாட்சியரின் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் பேரூராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இதற்கிடையில் எதிர்மனுதாரர் திரு. சதீஷ் என்பவர் பேரூராட்சிக்கு 10.3.2023 நாளிடப்பட்ட ஒரு மனு சமர்ப்பித்துள்ளார். அந்த மனுவில் நான் 1 செண்ட் இடத்தில் தான் வீடு கட்டி உள்ளேன். கூடுதலாக ஆக்கிரமிப்பு ஏதும் செய்யவில்லை என்பதோடு திருவட்டாறு தாலுகா நில அளவையரை தொடர்புகொண்டபோது தற்போது குளங்கள் அளவு நடைபெற்று வருவதால் இன்னும் 30 நாட்கள் கழித்து இடத்தை அளந்து திடப்படுத்தி தருவதாகவும், தெரிவித்துள்ளார். மேலும் திரு. ஜான் வெஸ்லி என்பவர் எனது அக்காளின் மகனாகும் எனவும் திரு. பிரபாசிங் அவருடைய சகோதரி திருமதி. ஜாய்ஸ் என்பவர் எனக்கு எழுதிக்கொடுத்ததும் நான் மிகவும் கஷ்டப்பட்டவன் என்பதால் எனது அக்கா மற்றும் உறவினர்கள் சேர்ந்தே இந்த வீட்டை கட்டி தந்தார்கள். தற்போது குடும்ப பிரச்சினையின் காரணமாக என் மீது பழி சுமத்துகிறார். அதோடு நான் இந்த நிலம் சம்மந்தமாக பத்மநாபபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.24/2023 IA.No.1/2023 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என தெரிவித்து அதன் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி விபரத்தினை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 23.03.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.03.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

23.03.2023 அன்று மனுதாரர் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

> "கன்னியாகுமரி மாவட்டம் வேர்கிளம்பி பேரூராட்சி, மார்த்தாண்டன்விளை, புவன்கோடு சர்வே எண் 281/16 மற்றும் 281/17B கதவு எண் 16/56Aல் எனக்கு சொந்தமான 3 செண்ட் இடம் உள்ளது. எனது இடத்திற்கு பக்கத்தில் திரு சதீஷ் என்பவருக்கு சொந்தமான 1 செண்ட் இடம் உள்ளது. மேற்கண்ட 1 செண்ட் இடத்தில் வீடு கட்டும்பொருட்டு மேற்கண்ட திரு. சதீஷ், போலி கட்டட அனுமதியுடன் எனக்கு சொந்தமான 3 செண்ட் இடத்தில் 1 செண்ட் இடத்தை சேர்த்து பேரூராட்சி அலுவலர்களின் உதவியுடன் விதிகளை மீறி வீட்டை கட்டியுள்ளார். இது தொடர்பாக பேரூராட்சியில் புகார் அளித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
>
> எனவே மேற்கண்ட திரு. சதீஷ் என்பவரின் போலியான கட்டட அனுமதியை இரத்து செய்தும், அவரது இடத்தின் அளவையும் பேரூராட்சியால் நேரடியாக ஆய்வு செய்து, எனது மேற்கண்ட 1 செண்ட் இடத்தை மீட்க ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

23.03.2023 அன்று வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் (பொ) இம்முறை மன்ற நடுவத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி பேரூராட்சியில் திரு. சதீஷ் என்பவர் 23.1.2017அன்று கட்டட அனுமதி வேண்டி மனு சமர்ப்பித்திருந்தார். மேற்கண்ட கட்டட அனுமதி விண்ணப்பம் ஆய்வு செய்யப்பட்டு 1 சென்ட் இடத்தில் தரைதளம் 403.39 சதுர அடியிலும், முதல் தளத்தில் 268.50 சதுர அடி இடத்திலும் கட்டடம் கட்ட 29.12.2017 அன்று வரைபட அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட கட்டடத்திற்கு பேரூராட்சியால் வரிவிதிப்பும் செய்யப்பட்டது. மனுதாரரின் புகார் மனுவையடுத்து, புகாரில் தெரிவித்துள்ளவாறு திரு. சதீஷ் என்பவர் அவாது இடத்தில் மட்டும் வீட்டை கட்டாமல் மனுதாரரின் இடத்தையும் சேர்த்து கட்டியுள்ளரா என்பதை சொத்து ஆவணங்களின் அடிப்படையில் மேற்கண்ட இடத்தை அளந்து எல்லை நிர்ணயம் செய்து அறிக்கை வழங்கிட சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் கோரப்பட்டுள்ளது. வட்டாட்சியரின் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் பேரூராட்சியால் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என்னால் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனது 23.3.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு வாக்குமூலம், வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டம், நாசரேத்தை சேர்ந்த மனுதாரர் திரு. P. ஜான்வெஸ்லி என்பவர் தனது 4.3.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி பேரூராட்சிக்குட்பட்ட தனக்கு சொந்தமான சர்வே எண்.281/16 மற்றும் 281/17Bல் 3 சென்ட் உள்ள நிலத்தில் தனது இடத்திற்கு பக்கத்திலுள்ள திரு. சதீஷ் என்பவர் போலி கட்டட அனுமதியுடன் தன்னுடைய 1 சென்ட் நிலத்தில் முறைகேடாக வீட்டைக் கட்டியுள்ளார் என புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு. P. ஜான் வெஸ்லி என்பவருக்கு கன்னியாகுமரி மாவட்டம் வேர்கிளம்பி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.281/16 மற்றும் 281/17B ஆகியவற்றில் சொந்தமாக 3 சென்ட் பரப்பளவு கொண்ட இடமுள்ளது. இவரது இடத்திற்கு பக்கத்தில் சர்வே எண்.287/16,17ல் உள்ள திரு. சதீஷ் என்பவருக்கு சொந்தமான 1 சென்ட் பரப்பளவு கொண்ட இடத்தில், திரு. சதீஷ் என்பவர் 403.39 ச.அடி. கொண்ட தரைத்தளம் மற்றும் 268.50 ச.அ. பரப்பளவு கொண்ட முதல் தளத்தில் கட்டடம் கட்ட வேர்கிளம்பி பேரூராட்சியால் 29.12.2017 அன்று அனுமதியளிக்கப்பட்டு, அதன்படி வீடு கட்டி முடிக்கப்பட்டு, மேற்கண்ட வீட்டினை அப்போதைய வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு, 14.09.2020 முதல் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளதை ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது.

இந்நிலையில் மனுதாரர் திரு. P. ஜான் வெஸ்லி என்பவர் சர்வே எண்.281/16 மற்றும் 281/17Bல் தனக்கு சொந்தமான 3 செண்ட் பரப்பளவு நிலத்தில், 1 செண்ட் இடத்தினை திரு. சதீஷ் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து மேற்காணும் தரைதளம் மற்றும் முதல் தளம் கொண்ட வீட்டினை கட்டியுள்ளதாக புகார் மனு வேர்கிளம்பி பேரூராட்சிக்கு வரப்பெற்றதும், வேர்கிளம்பி பேரூராட்சியால் திரு. சதீஷ் என்பவருக்கு கட்டடம் கட்ட வழங்கப்பட்ட அனுமதி (அனுமதி எண்.105/2017–18-நாள்:29.12.2017)ன் படி கட்டடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை நிலத்தினை அளந்து, திடப்படுத்தி எல்கை நிர்ணயம் செய்து அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு பேரூராட்சியின் 8.2.2023 நாளிடப்பட்ட அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் திரு. சதீஷ் என்பவரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படாததால், வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலர், பேரூராட்சியால் வழங்கப்பட்ட வரைபட அனுமதியின்படி திரு. சதீஷ் என்பவர் கட்டடம் கட்டியுள்ளரா அல்லது மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ளப்படி கூடுதல் சொத்தில் கட்டடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை சொத்து ஆவணப்படி அளந்து எல்லை நிர்ணயம் செய்து திடப்படுத்திட வேண்டி கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதை ஆவணங்களின் வாயிலாக அறிய முடிகிறது. ஆனால் வட்டாட்சியரின் அறிக்கை பெறப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து, திரு. சதீஷ் என்பவர் பேரூராட்சிக்கு சமர்ப்பித்த 10.3.2023 நாளிட்ட மனுவில், திருவட்டார், வட்டாட்சியர் அலுவலகத்தில் நிர்வாகப் பணி நிமித்தமாக தற்போது நில அளவீடு செய்ய இயலாது என தெரிவித்து. 1 மாதகாலம் அவகாசம் கோரியுள்ளார்.

மேலும் சதீஷ் என்பவர் தனது மனுவில் இந்நிலம் தொடர்பாக பத்மநாபபுரம் மாவட்டம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளதாக (வழக்கு எண்.O.S.No.24/2023 மற்றும் 1A No.1/2023) தெரிவித்துள்ளதை ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b)ன் கீழ் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள பொருள் தொடர்பான புகார் குறித்து விசாரணை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்க தேவையில்லை என வரையறுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், திரு. சதீஷ் என்பவருக்கு வேர்கிளம்பி பேரூராட்சிக்குட்பட்ட மேக்கோடு கிராமத்தில் சர்வே எண்.281/16,17ல், வேர்கிளம்பி செயல் அலுவலரால் ந.க.எண்.105/2017–18, 29.12.2017 நாளிட்ட நடவடிக்கை ஆணையின்படி 1 செண்ட் இடத்தில் தரைத்தளம் (Plinth Area) 403.39 சதுர அடியிலும் மற்றும் முதல் தளம் (First Floor) 268.50 சதுர அடி அளவிலும் கட்டடம் கட்ட வரைபட அனுமதியளிக்கப்பட்டபடி, கட்டடம் கட்டப்பட்டுள்ளதா என்பதை கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டாட்சியர்/நில அளவையர் அளவீடு செய்தும், கட்டட அனுமதி அளிக்கப்பட்ட அளவீடுகளை விட அதிக பரப்பளவில் முறைகேடாக கட்டட உரிமையாளரால் கட்டடம் கட்டப்பட்டிருந்தால் விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதனை கண்காணிக்கத் தவறிய மற்றும் அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய வேர்கிளம்பி பேரூராட்சியின் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான

ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

The Assistant Director of Town Panchayats of Kanyakumari District is directed to ensure that inspection of the building with reference to the Building plan approval of the Town Panchayat should be carried out within a month's time. During such inspection and measurement, if deviations and violations of the Building plan are noticed besides occupying excess area by the owner of the Building, action as per provisions of the Building plan approvals should be launched immediately without delay.

2023–ஆம் ஆண்டு, ஏப்ரல் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.பி. ஜான் வெஸ்லி,
எண்.14b, திருமறையூர்,
நாசரேத் - 628 617,
தூத்துக்குடி மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி.
கன்னியாகுமரி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர்நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம் ,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்.